**05.11.2019 அ.வ.எண். 148/2008 வா.த.சா. 3 செல்வம்**

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். தாவா சொத்தின் விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்து என்ன வகையான நிலம் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண். 385 ஆகும். தாவா சொத்து உட்பிரிவு செய்யப்பட்ட நிலமா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 5 செண்ட் ஆகும். அதன் நீள அகல அளவுகள் எனக்கு தெரியாது. தாவா சொத்து புஞ்சை நிலம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமான பட்டா சிட்டா ஆகியவைகளை நான் பார்த்ததில்லை. தாவா சொத்து ஆதியில் கண்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். அந்த சொத்து அவர் சுயமாக கிரையம் பெற்ற சொத்து என்று சொன்னால் சரிதான். கண்ணன் என்பவரை எனக்கு நேரடியாக தெரியும். அவர் எனது பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். கண்ணன் என்பவர் 1983ம் வருடம் சங்கர் என்பவருக்கு கிரையமட் கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரிந்தவரையில் அவர் கிரையம் ஏதும் செய்துகொடுக்கவில்லை. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1999ம் வருடம் வரை சங்கர் என்பவர் தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றும் அதன்பின்பு 26.08.1999 அன்று மாயாவதி என்பவருக்கு தாவா சொத்தை சங்கர் என்பவர் கிரையம் கொடுத்தார் என்றும், அதனடிப்படையில் 2ம் பிரதிவாதி மாயாவதி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக குமார் என்பவர் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்ததன் அடிப்படையில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்தின் அருகே தாவா சொத்தை கண்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்கள் ஏதும் இல்லை. 2ம் பிரதிவாதி மாயாவதி என்பவர் தாவா சொத்து சம்மந்தமாக 09.09.2004 அன்று தனது மகனான 3ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனடிப்படையில் 3ம் பிரதிவாதியின் பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டு வருவாய்துறை ஆவணங்களில் இன்றளவும் தாவா சொதது 3ம் பிரதிவாதி பெயரில் இருந்துவருகிறது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதியை எனக்கு தெரியும் அவர் 2ம் பிதிவாதியின் மகன் ஆவார். 4ம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் அருகே 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதவாதிக்கு அவ்வாறு பாத்தியப்பட்ட சொத்து மற்றும் தாவா சொத்தின் பட்டா ஒரே பட்டாவாக இருந்துவருகிறது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. குமார் என்பவரின் தாத்தாவான கண்ணன் என்பவர் அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை சங்கர் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டதால் குமார் எனபவருக்கு தாவா சொத்தின் மீது உரிமை ஏதும் இல்லாத இருந்தது என்றும் அவ்வாறு உரிமையில்லாத தாவா சொத்து சம்மந்தமாக அவர் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிகொடுக்க முடியாது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. கண்ணன் என்பவரின் மகன் பெயர் முருகன் ஆகும். தாவா சொத்து சம்மந்தமாக

முருகன் என்பவர் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் ஏதும் இருந்துவந்ததா என்று கேட்டால் இருந்துவந்தது. நான் தாவா சொத்து சம்மந்தமாக குமார் என்பவரின் பெயரிலும் ஆவணங்கள் உள்ளன.அதை அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். கண்ணன் என்பவர் தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டதால் அவரது மகன் முருகன் மற்றும் அவரது பேரன் குமார் ஆகியோர் பெயர்களில் தாவா சொத்து சம்மந்தமாக ஆவணங்க்ள் ஏதும் இருந்ததில்லை என்றும், நான் அவர்களது பெயரில் ஆவணங்கள் இருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. முருகன் மற்றும குமார் ஆகியோர் வந்தவாசி நகராட்சியில் பணிபுரிந்து வந்தனர். அதனடிப்படையில் அவர்களுக்கு நகராட்சி ஊழியர்கள் நன்கு பரிட்சயம் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் 2ம் பிரதிவதிக்கு பாத்தியப்பட,டு அதன்பின்பு 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படட்டது என்றும், தாவா சொத்தின் மீது உரிமை மற்றும் அனுபவம் இல்லாத பட்சத்தில் தவறாக நகராட்சி ஊழியர்களின் துணையோடு தவறாக தாவா சொத்து சம்மந்தமான நிலப்பதிவேட்டு நகலில் வாதியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.